


சிவகங்கை மாவட்டம் நகரம் பட்டியில் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் வாரிசு தாரர்கள் கலந்து கொண்டார்கள்.

# திண்டிவனத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான், மதிவதனி சிறப்புரை!

திண்டிவனம், ஜூன் 11 - இன்று மாலை திண்டிவனத்தில் நடைபெறுகிறது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் திராவிடர் எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான், திராவிட கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி ஆகியோர்கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை திராவிட கழகத்தின் சார்பில் திராவிட எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம் இன்று (11 .6 .2026 வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வண்டி மேடு அருகில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு திண்டிவனம் மாவட்ட தலைவர் அன்பழகன் தலைமை தாங்குகிறார். திண்டிவனம் மாவட்ட செயலாளர் இளம் பருதிஅனைவரையும் வரவேற்கிறார்.

திராவிடர் கழக நிர்வாகிகள் பரந்தாமன், ராதா, நவா.ஏழுமலை, அன்புக்கரசன், பெருமாள், துரை . திருநாவுக்கரசு, விஜய லட்சுமி, வில்லவன் கோதை, பச்சையப்பன், பன்னீர் செல்வம், ரமேஷ் ,தேவராஜ், ஓவியர் செந்தில், கோபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் சே. மெ.மதிவதனி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர்.

கூட்டத்தில் தோழமை கட்சி நிர்வாகிகள்சுப்ரமணியன், சௌரிராஜன் , வெங்கடேசன், மலைச்சாமி , பாபு கோவிந்தராஜ், ஏ.எம்.ஆர்.சையது ஹாசன், பாண்டியன், கலையரசு, வேலு வள்ளுவன், தி.மு.க. நிர்வாகிகள் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் ,சீத்தாபதி சொக்கலிங்கம்,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, ஒன்றிய செயலாளர்கள் ராஜாராம் ,தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன்,

செழியன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், திண்டி வனம் நகர செயலாளர் ஆசிரியர்கண்ணன், முன்னாள் நகர் செயலாளர் கபிலன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி. ரமேஷ், எம்.டி. பாபு, நகர அவைத்தலைவர் ரவிச்சந்திரன், நகர கழக பொருளாளர் ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், மாவட்ட துணை அமைப்பாளர் சுபாஷ் சந்திரபோஸ், நகர மன்ற உறுப்பினர் பாஸ்கர், கோவிந்த ராஜ்,

திண்டி வனம் நகர திராவிடர் கழக பொறுப்பாளர்கள் பாலசுந்தரம், விநா யக மூர்த்தி, பாவேந்தன், ராஜாராம் ,அருள், கன்னியப்பன் ,செந்தில் வேலன், அன்பரசன் ,கௌரிஸ்ரீதர், குமார், சாந்தி பெருமாள், விஜயலட்சுமி, லட்சுமி பாவேந்தன், நிவேதா, தேன்மொழி, கஸ்தூரி, அமலா ரமேஷ் உள்ளிட்டோர். கலந்துகொள்கின்றனர். மாநில இளைஞரணி துணை செயலாளர் தம்பி பிரபாகரன் அனைவருக்கும் நன்றி கூறுகிறார்

---

### குளச்சல் வாணியக்குடி

# மீன்பிடி துறைமுகப் பணியை உடனே தொடங்கிடுக!

## ஆஸ்டின் எம்.எல்.ஏ. தமிழ்நாடு அரசுக்குக் கோரிக்கை!

நாகர்கோவில், ஜூன் 11 - கழகத் தலைவர் மு க ஸ்டாலினால் ரூபாய் 300 கோடி நிதி ஒதுக்கப்பட்ட குளச்சல் வாணியக்குடி மீன்பிடி துறைமுக பணியை உடனடி தொடங்க வேண்டுமென தமிழக மீன்வ ளத் துறை அமைச்சருக்கு நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின்கோரிக்கைவிடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கோரிக்கையில் கடந்த 8.6. 2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து மீன்வளத்துறை அமைச்சர் தலைமையில் மீனவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும்விழா மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மீன் வளத் துறைஇயக்குனர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலானஆட்சியில் மீனவர்களுக்கான தடைக்கால நிவாரண நிதி ரூ.5000 லிருந்து ரூ.8000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

தற்போது அரசு கடந்த தேர்தல் அறிக்கையில் அதை 20 ஆயிரம் .ஆக உயர்த்தஇருப்பதாக அறிவித்தது. அந்த வாக்குறுதியின் அடிப்படையில் மீனவர் களுக்கு 20000 ரூபாய் உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கடந்த ஆட்சி காலத்தில் அழிக்கால் மீனவர் கிராமத்தை தூண்டி வளைவு அமைப்பதற்காக பணி மேற்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு ஆய்வு பணியும் முடிந்தது அதனுடைய அறிக்கையும் அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டது .

ஆகவே வரக்கூடிய பட்ஜெட்டில் அழிக்கால் மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் குளச்சல் மீன் பிடி துறைமுக விரிவாக்க பணிக்கு ரூபாய் 150 கோடியும் வாணியக்குடி புதிய மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கு ரூபாய் 150 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு மாதங்கள் ஆகியும் அந்த பணி தொடங்கப்படவில்லை .

எனவே உடனடியாக அந்த பணிகளை தொடங்க வேண்டும் எனவும் கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு விபத்து ஏற்படுகின்ற போது உடனடியாக அவர்களை மீட்கும் வகையில் கடல் ஆம்புலன்ஸ் வசதி செய்து தர வேண்டும் எனவும் பெரிய அளவிலான இயந்திரப் படகுகளை பதிவு செய்வதற்கு 240 hp மோட்டார் மற்றும் 24 அடி நீளம் இருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்தி பதிவு செய்ய தயாராக இருக்கும் சுமார் 700 இயந்திர படகுகளை பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட குமரி மாவட்ட மீனவர் நலன் காக்கும் பல்வேறு கோரிக்கைகளை கூட்டத்தில் வாயிலாக கோரிக்கையாக கொடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### நாகை ஆட்சியர் அலுவலகத்தில்

# அமைச்சர் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் திடீர் மின்வெட்டால் பரபரப்பு!

நாகப்பட்டினம், ஜூன் 11 - நாகை ஆட்சியர் அலுவல கத்தில் அமைச்சர் பங்கேற்ற ஆய்வு கூட்டத்தில் திடீர் மின்வெட்டு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து எல்.இ.டி. திரை வெளிச்சத்தில் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

**ஆய்வு கூட்டம்**

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் இயற்கை இடர் பாடு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அமைச்சர் ஷாஜகான் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது.

கூட்டத்தில் ஆட்சியர் பிரவீன்குமார், செல்வராஜ் எம்.பி., ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ.மற் றும் பல்வேறு அரசு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**திடீர் மின்வெட்டு**

கூட்டம் நடந்து கொண்டு இருந்தபோது அரங்கில் திடீ ரென மின்வெட்டு ஏற்பட்டது. திடீரென மின்வெட்டு ஏற்பட்டதால் அரங்கத்தில் பரபரப்பு நிலவியது. உடனடியாக அதனை சரிசெய்யும் பணியில் அங்கிருந்த மின்சார ஊழியர் கள் ஈடுபட்டனர். இருப்பினும் மின்சாரம் வரும்வரையில் கூட்டத்தை நிறுத்த விரும்பாத கலெக்டர் பிரவீன்குமார், அரங்கில் இருந்த பிரமாண்ட எல்.இ.டி. திரையின் வெளிச் சத்தை பயன்படுத்தி கூட் டத்தை தொடர்ந்து நடத்தி னார். அமைச்சரும், அதிகாரிகளும் அந்த வெளிச்சத்திலேயே ஆலோசனை மேற்கொண்ட னர்.

**பரபரப்பு**

கலெக்டர் அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் தானியங்கி வசதி கொண்டதாகும் ஆனால் இந்த ஜெனரேட்டர் நேற்று மின்வெட்டு ஏற்பட்டதும் தானாக இயங்கவில்லை. இதனால் மின்சார ஊழியர்கள் பழுதை சரிசெய்து ஜெனரேட்டரை இயக்கினார்கள். அரங்கிற்கு மின்சாரம் கிடைத்தது. அதன்பிறகே அரங்கில் இருந்த அதிகாரிகள் நிம்மதியடைந்தனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் பங்கேற்ற ஆய்வு கூட்டத்தில் திடீரென மின் வெட்டு ஏற்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கூட்ட முடிவில் அமைச்சர் ஷாஜகான் நிருபர்களிடம் கூறும்போது, "மாவட்டத்தில் 2 நாட்களுக்கு முன்பு வீசிய கடும் காற்றால் சில பகுதிகளில் சிறிது நேரம் மின்தடை ஏற்பட்டது. அதுவும் சில மணி நேரங்களில் சரிசெய்யப்பட்டது" என்றார்.

**திருச்சி, கடலூர்**

அதேபோன்று, திருச்சி மாவட்ட கிராமப்புறங்களில் மின்வெட்டு அடிக்கடி ஏற்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம்சா ட்டுகின்றனர். ஜீயபுரம் பகுதியில் மின்வெட்டால் விவசாயிகள் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவதி அடைந்து வருகின்றனர்.

கடலூர் மாவட்டம் விருத் தாசலம் அருகே கம்மாபுரம் பகுதியில் பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டதால் மின்வாரிய அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு சாலை மறியலிலும் ஈடுபட்டனர்.

மேலும் பண்ருட்டி, சிதம்பரம் பகுதியிலும் அடிக்கடி மின் வினியோகம் நிறுத்தப்படுகிறது.

விழுப்புரம், தர்மபுரி, நாமக்கல், தஞ்சை, திருவாரூர், நாகை, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் சில பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற் பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிக் குள்ளாகி வருகின்றனர்.




கோத்தகிரியில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட கட்டுமானப் பொறியாளர் சங்க ஆண்டு விழா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கௌரவிப்பு விழாவில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு,கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி ஆகியோர் கலந்துகொண்டு, விழாவினை துவக்கி வைத்தனர். இவ்விழாவில் மாவட்ட அவைத்தலைவர் போஜன்,கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் பாபு, உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் சம்பத், விஜயகாந்த், அசோக்குமார், கிறிஸ்தோபர், தமிழக பாண்டிச்சேரி பொறியாளர் சங்க நிர்வாகி ராகவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

# “முதல் மரியாதைக்கு” இறுதி மரியாதை!



பிதாமகனே
போய்விட்டாயா?
கிராமத்து ராஜாவே
இறந்துபட்டாயா?

எங்கள்
மண் வாசனையில்
இன்று சாவு மணக்கிறதா?

அடைத்துக் கிடந்த
திரையுலகக் கதவுகளைத்
திறந்தவெளிக்குத்
திறந்துவிட்டவனே!

ஆகாயத்திற்கு அடுத்து
அதிக நட்சத்திரங்களை
அறிமுகம் செய்தவனே!

என்னையும்
சுயமரியாதையோடு
சுடரொளி வீசச்செய்தவனே!

உடன்பிறப்பே
ரத்தத்தின் ரத்தமே என்ற
தலைவர்களின் மொழிக்கு இணையாக
என் இனிய தமிழ்மக்களே
என்ற ரத்தினச் சொற்களுக்கு
முத்திரை சேர்த்தவனே!

நீ மாயக்காரன்
புழுதியைப் பொன்செய்தாய்

சினிமாவின் நிறம்
வெள்ளையென்று இருந்ததை
கருப்பென்று மாற்றிய
கலையாளன் நீ!

இடிந்த சுவர்களும்
உடைந்த மனிதர்களும்
கிழிந்த வாழ்க்கையும்
உன் கலையின் கச்சாப் பொருட்கள்

இந்தக் கரட்டுப்பட்டியைத்
தில்லி நகரத்திற்கு கொண்டுசேர்த்த
அல்லிநகரத்து அரசன் நீ

இனி நான் எப்படித்
தனியாகத் தேனி போவேன்?

மேற்குத் தொடர்ச்சி மலை
அருவிகளால் அழுதுகொண்டே கேட்குமே...
எங்கே பாரதிராஜா?

கத்தாழங்காட்டுக்
கரிச்சான் கேட்குமே...
எங்கே பாரதிராஜா?

கருவேலமரம் கேட்குமே
எங்கே பாரதிராஜா?

என்ன பதில் சொல்வேன்?
எப்படிநான் தனித்திருப்பேன்?

நீ தூரிகை
நான் வண்ணம்
நான் தூரிகை
நீ வண்ணம்

தூரிகை இல்லாமல் வண்ணமும்
வண்ணம் இல்லாமல் தூரிகையும்
என்னத்துக்காகும்?

நீ அரிவாள்
நான் கைப்பிடி
நான் அரிவாள்
நீ கைப்பிடி

அரிவாள் இல்லாத கைப்பிடியும்
கைப்பிடி இல்லாத அரிவாளும்
என்னத்துக்காகும்?

என்னை அழவிடு
உடம்பின் உப்பெல்லாம்
கண்ணீராய்க் கரையட்டும்

இனி என்ன எழுத?
நடிகர் திலகம் போல்
நானும் புலம்புகிறேன்

‘பூங்காத்து திரும்புமா?
எம் பாட்ட விரும்புமா?
பாராட்ட - மடியில் வச்சுத் தாலாட்ட
எனக்கொரு தாய்மடி கிடைக்குமா?’

முதல் மரியாதை செய்தவனே
உனக்கென் இறுதி மரியாதை!



கவிப்பேரரசு
வைரமுத்து